# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,
# அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க
# (திருத்த)ச் சட்டம்

---

*[1983, ஏப்ரில் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஏப்ரில் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 50*

## 1983 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க (திருத்த)ச் சட்டம்

[1983, ஏப்ரில் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 8/80
1306

### அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துமூன்றும் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டதான அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச்சட்டத்தின் (இது, இதனகத் திதன்மேல் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— 283 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(இ) உறுப்பினர் எவரும் தொடர்ச்சியான மூன்றாண்டுகளுக்கு மேல் பதவி வகித்தல் ஆகாதென்பதுடன், சேவையில் இருப்பவராயின், ஒவ்வோர் உறுப்பினரும் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்தின் நிருவாக எல்லைகளுக்குள் தொழிலுக்கமர்த்தப்பட்டவராய் இருத்தலும் வேண்டும் என்னும் காப்புவாசகத்துக்கு அமைய, ஆண்டுக்கு ஒருமுறை, ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது தெரிந்தெடுக்கப்படவேண்டிய கூட்டுத்தாபனத்தின் பதினொரு உறுப்பினர்களையும் ;".

3. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1973 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டதான முதன்மைச்சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(iv) அவர்கள் நாள்தோறும் அலுவலகத்திற்குப் போவதற்கும் திரும்பி வருவதற்கும் வசதியாய் இருக்கும்வண்ணம் பைசிக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்களையும் கொள்வனவு செய்வதற்கும் :

ஆயின், எவ்வாறாயினும், தனியோர் ஊழியரின் விடயத்தில் அவ்வாறு வழங்கப்படும் பணத்தொகையானது, திறைசேரிச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தொகையையோ அல்லது பேர்க்குவரத்துச் சாதனத்தின் கொள்விலையையோ, இவற்றுள் எது குறைந்ததோ அதை விஞ்சுதல் ஆகாது, அத்துடன்".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.